உ

முருகன் துணை.

அறவுரை.

இது

சென்னை திருவேட்டீசுவரன் பேட்டை

திருவாளர்

கா. சி. சிவசங்கர முதலியார்,

அவர்கள் இயற்றியது.

லக்ஷ்மி பிரஸ்,

மவுண்ட்ரோட் மதறாஸ்.

காபிரைட்]   1920   [விலை அணா. 0-6-0.

முகவுரை.

என்னிடம் விருப்பமுள்ளார் பலர் என்னை ஏதாவதொரு நூல் எழுத வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருப்பது வழக்கமா யிருந்தது. எனக்கு எப்படி நூலெழுதுவதென்றும் எவ்வகையான நூலெழுதுவ தென்றும் தெரியாததால் கற்றுங் கேட்டுங் கண்டும் உணர்ந்தவைகளுள் என் போல்வார்க்கு ஏதேது நன்றி பயக்குமென்று நினைத்தேனோ அவைகளை ஒரு நூலென்றெழுதி யிருக்கின்றேன். இதைப் படிப்போர் குற்றங்காணின் என்னைத்திருத்த வேண்டுகிறேன்.

கா. சி. சிவசங்கரன்.

சிந்தாமணி பரிபாடல் முதலிய சங்கநூல்களை அச்சிட்டு
வெளிப்படுத்தி தமிழுலகத்திற்குதவி புரிந்தவரும்
இராஜதானி சர்வகலாசாலை தமிழ்ப்போதகாசிரியராயிருந்தவரும்
இப்போது சிதம்பரம் ஸ்ரீமீனாக்ஷி தமிழ்க்கலாசாலையை
நடத்துபவருமாகிய பிரும்மஸ்ரீ
மஹாமஹோபாத்தியாய

வே. சாமிநாத ஐயர் அவர்கள்

எழுதியருளிய திருபம்.

சிதம்பரம், 23-2-25.

தாங்கள் அன்புடன் அனுப்பிய அறவுரைப் புத்தகமொன்றும் நல்லுரை நானூறபது என்னும் புத்தகங்கள் மூன்றும் கலிவெண்பா ஒன்றடங்கிய கையெழுத்துக் கடிதமொன்றும் வரப்பெற்றுப் படித்துப்பார்த்து இன்புற்றேன். ஒவ்வொன்றும் இன்பத்தைத்தருவதாயினும் தாங்கள்மிக்க அன்புடனியற்றிய இருமுது குரவர் வணக்கச் செய்யுட்கள் மிக்க இன்பத்தை விளைவித்து மனத்தைக்கனியச் செய்கின்றன. உங்களுக்குத் தோற்றிய இவ்வருமைக் கருத்து ஏனையோருக்குத் தோற்றவில்லையே யென்று மிகவருந்துகின்றேன். இயற்றியிருக்கும் நூல்கள் யாவருக்கும்மிகப்பயன் படக்கூடியவையே. நேரமில்லாமையால் எழுதுவதை இம்மட்டோடே நிறுத்துகிறேன். உங்களுடைய க்ஷேமத்தைக்குறித்து ஸ்ரீநடராஜமூர்த்தியைப் பிரார்த்திக்கின்றேன்.

உ

சித்தன் துணை.

திருக்கோவலூராதீனம் ஸ்ரீமத் ஞானியார் மடாலயம் திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் ஸ்ரீலஸ்ரீ சிவசண்முகமெய்ஞ்ஞான சிவாசாரிய ஸ்வாமிகள் இயற்றிய சாற்றுக்கவி.

சென்னை நகர்வாழ் சிவசங் கரப்புலவன்

மன்னு மறிஞர் மதிப்புறவே—சொன்ன

கறைநீங் கறவுரையைக் கண்டுவந்தோ மிந்நூல்

நறையுளார்க்கின்பந் தரும்.

திருப்பாதிரிப்புலியூர், பண்டிதை, ஸ்ரீமதி அசலாம்பிகையம்மாள் அவர்கள் இயற்றிய சாற்றுக்கவிகள்.

சீதமார்பொழில்வளஞ்சே ராமலக நகருறைந்து செந்தேன் பில்க
நாதமார் தமிழ்க்கவிகள் பலபுனையு நாவலநீர் கவின்ற நூலை
நீதிநூல் சுகவழிநூல் நெறியொழுக்க நூலெனவு நிலையா மின்பப்
போதநூலென் றிடவும் புகலலாமெனத் துணிந்தேன் புகலுங் காலே.

வற்றாத பெருந்திருவும் வளையாத பேரறிவும் மாசுதோய்ந்து
பற்றாத மனநிலையும் பரியாத தொல்வழக்கும் பரிந்தே நல்கும்
கற்றா தரிக்கிலிதை யெனப்புலவோர் பரிசாகக் கருதுவாரேல்
எற்றோமற் றதன்பெருமை யிசைப்பதென வோர்கின்றேன் இயம்புங்காலே.

சீர்தோன்றுஞ் சென்னைநகர்த்திருவேட்டீ சுரன்பேட்டை யெனும்பேர் சேர்ந்த
ஊர்தோன்றி யுளந்தோன்றிலும் பாகட்குஞ் சுவைவெறுப்புத் தோன்றவூறும்
நார்தோன்றி யறவுரையை யினிதியற்றி யளித்திட்டா னல்லோர் வாழ்த்த
பேர்தோன்றும் சிவசங்க ரப்பெயர்கொ ளரும்புலமைப் பெரியோன்றானே.

உ

முருகன் துணை.

அன்னை வணக்கம்.

அன்னையினுந் தயையுடையா ரில்லையென்றே
பொய்யாத வறநூ லெல்லாம்
சொன்னபடி தவறாம லீயெறும்பு
நாடாத சுகத்தில் வைத்தே
தன்னமுதப் பால்கொடுத்து வுணவூட்டி
யுடல்வளர்த்துத் தமிழ்த்தீஞ் சொல்லாம்
இன்னமுது மூட்டியவென் மீனாட்சி
யன்னையடி யெண்ணி வாழ்வாம்.

பிதா வணக்கம்.

சிந்தையெலாம் பழனிமலைச் சித்தனடிக்
கமலத்தே செலுத்தி நாளும்
நிந்தையிலாப் பெரியார்தந் திருத்தொண்டு
செய்யுமரு நியமம் பூண்டு
விந்தையுறு தமிழ்ச்சுவைக்கே நாப்படைத்து
வாழ்வு பெற்ற மேலோனை
எந்தையிசைச் சிங்கார வேற்குரிசி
லடிக்கமலம் எண்ணி வாழ்வாம்.

குரு வணக்கம்.

நீர்கொண்ட நெடுங்கடலை யகத்தியனார்
குடித்தகதை நிசமோ வன்றோ
சீர்கொண்ட கலைக்கடலைக் குடித்துமன
வெளியான சிலம்பிற் காத்தே
ஏர்கொண்ட மாணவர்தம் அறிவான
பயிர்க்குப்பெய் யெழிலி யான
நாிகொண்ட சிவாநந்த சாகரப்பே
ராசிரியர் நன்றி யென்னே.

தெய்வ வணக்கம்.

ஞானகருணாகர முகமண்டலத்திலகு
நயனத்தி லருளொழுகவும்
நறுமணச்சவ்வாதுப் பொட்டொன்றுபுருவத்தி
னடுவே விளங்கியொளிர
ஆனபுன் முறுவலோய் மலர்வாயி லிணையிலா
வமுதமுத்தமிழ் மொழியினால்
அடியருக்கரிதான மறைபாடு பண்ணொடும்
அகன் றொளிறுகின்ற மார்பில்
தேனொழுகு நீபமலர் மாலையொடு கண்டிகை
திகழவெண்ணீ றொளிரவே
திடமான விடையிலொரு கையூன்றி யானந்த
சித்தனாய் வேறு கையில்
மானவே லொளிவீச கோல்கொண்டு பாதுகை
மலரடியை யேந்த வென்றன்
மனமகிழ பழனியங்கிரிமேவு மையனிரு
மலரடிக் கன்பு செய்வாம்.

உ

முருகன் துணை.

அறவுரை.

அறிவு.

உலகத்தில் மக்கள் தமது மனதிற் கென்னென்ன தோன்றுமோ அவைகளை யெல்லாம் மெய்யென்றெண்ணி கூறுகின்றார்கள். அவைகளையே கேட்டுப்பழகுகின்ற நாமும் உண்மைப்பொருளையுறிய வேண்டிய ஆசை மேற்கொண்டு கற்கவேண்டிய நூல்களைக்கற்றுங் கேட்க வேண்டியவைகளைக் கேட்டும் ஐய நீங்கி மெய்யுணராமல் அவர்களைப்போலவே பொறாமை, வெகுளி, காமம், மயக்கம், பயம், ஆசை முதலியவைகளால் மனக்கலக்க மெய்தப்பெற்று துன்பமடைகின்றோம். பிறர்போல் துன்பமடையாது இன்பவடிவாயிருப்பதே அறிவு. ஒவ்வொரு பொருளிலும் நுழைந்து தூக்கி யளந்து ஆராய்ந்து பார்க்கில் அவ்வறி வுண்டாம். தூக்கி யளந்து ஆராய்ந்து பார்க்கும் விருப்பம் அறனறிந்து மூத்த அறிவுடையார் பாற்கேட்ட கேள்வி யாலுண்டாம். கேள்வி கேட்கும் விருப்பம் கலவியால் உண்டாம். கரத்தானும குறிப்பானும் பிறவற்றானுங் கற்பிக்குங் கல்வி பலவுண்டேனும் ஈண்டிப்போ தெடுத்துக் கொண்டது நூலளவாலாய கல்வியே. இக்காலத்து நூல்கள் பலவகையாய்ப் பிறந்து போந்துலவுவதால் அவைகளெல்லாம் அறிவை வளர்க்கும் நூல்களென்

றெண்ணக்கூடாது. அறத்தாற்றிலாகா இன்பநூல்களும் அவைகளில் பலகாணப் படுதலால் அறிவு நூல்களைத்தேர்ந் தெடுத்துக் கற்கவேண்டும். கற்றதிலுண்டாய ஐயங்களை பெரியார் வாய்க்கேட்டு தெளிதல் வேண்டும். தெளிந்தவைகளைப் பலமுறையும் எண்ணியெண்ணி யுணரவேண்டும். அவ்வுணர்ச்சிதான் அழியாத இன்பவாழ்வை யளிக்கும். அவ்வின்பத்தை யடையப்பயில வேண்டிய துறைகள் மூன்று.

1. உடம்பினியல்பும் அதற்கொத்த உண்டியாதிகளின் குணகுணங்களும் தெரிவிக்கும் நூல்களைப் பற்றி கற்று கேட்டறிதல்.

2. மனதையும் ஐம்புலன்களையும் பற்றி உணர்தல்.

3. அறிவு என்பதைப்பற்றி யுணர்தல்.

இவை மூன்றையும் முறையே ஆராய்ந்தால்தான் ஒருவனுக்கு மெய்ப்பொருள் விளங்கும். அறிவு மனதையடக்கி யாளவும் மனம் உடம்பை யடக்கி யாளவும் பழகிவர வேண்டும்.

காலத்திற்கும் வருவாய்க்கு மேற்ப, தம் மனம் போலொழுகும் மக்களைப் பார்த்து அவர் போலவே நடையுடையுணவாதிகளிற் பழகுவது அறியாமையே.

நம்பால் நிகழும் நினைப்பும் பேச்சும் செயலும் உயிருக்கும் உடலுக்குந் துன்பத்தை யுண்டுபண்ணுதவையாயிருக்கின்றனவாவென்று ஆராய்ந்து பழகுதல் வேண்டும். கோபம், காமம், பயம், வருத்தம், அவா முதலியன இரத்தக்கொதிப்பையும், நரம்புத்தளர்ச்சி

யையும் இருதயத்துடிப்பையும் உண்டாக்கி உடம்பை யும் நெஞ்சையும் பலவீனப்படுத்திகண்ணொளியையும் முகப் பொலிவையும் கெடுத்து, துன்பத்துக்காளாக்கு கின்றன. மேலே சொன்ன குணங்களுக்குக் காரண மாகிய எண்ணங்களை எண்ணுமலிருப்பதே அறிவுடை மை. தமது உடம்பிற்கு உரனுண்டாக்கும் உணவுகளை யறிந்து உண்பதே அறிவுடைமை. உடம்பிற்கு உண் டாகும் நோய் மனதைத்தாக்கி வருந்தச் செய்வதால் உடம்பு திடமாய் நோயற்றிருந்தால்தான் மனோதிட மும் ஆனந்தப்பெருக்கும் உண்டாகும் என்று உணரு கின்றோம்.

உடம்பு அகலாகவும் இரத்தம் எண்ணெயாகவும் சுக்கிலம் திரியாகவும் அறிவு விளக்கொளியாகவும் இருக்கின்றன வென்று பெரியார் கூறுவதை இங்கு ஆராயவேண்டும்.

இன்ப துன்பங்கள் சொல்லிடத்தும், செய்கையி னிடத்தும் நினைப்பிடத்தும் பிறக்கின்றன. சொல்லும் செய்கையுங்கூட நினைப்பிலேயே பிறக்கின்றன. இன் பதுன்பங்களுக்கு நினைப்பே முதற்காரணம். நல்ல நினைப்புகளால் இன்பமும தீய நினைப்புகளால் துன்ப மும் உண்டாகின்றன. காமம் வெகுளி மயக்க முத லியவைகளுக்குக் காரணமாகிய எண்ணங்கள் இரத்தக் கொதிப்பையும் நரம்புத் தளர்ச்சியையும் உண்டாக்கி தேகதிடத்தையும் முகப்பொலிவையும கெடுக்கின்ற படியால் அப்படிப்பட்ட நினைப்புகளுக்கு நெஞ்சத்தில் இடங்கொடுக்கவே கூடாது. இவைகளுக்குக் காரண மாயிருக்கின்ற பரத்தையர், கள் சூது கடன் முதலிய

வைகளைக் கனவிலும் நினைக்கக்கூடாது, நாடகத்திலும் வேடிக்கையிலும் திருவிழாவிலும், சங்கீதத்திலும் வாசனைகளினும் செல்லும் கண் செவி மூக்கையும் பிறருக்கு கோபத்தையோ, வருத்தத்தையோ உண்டாக்கும் சொற்களைச்சொல்லும் நாவையும் அடக்கியாளும் அடக்கத்திற் பழகவேண்டும். பிறர் செய்யும் தீங்கையும் கொடிய சொல்லையும் பொறுக்கும் பொறுமையிற் பழகவேண்டும். எப்போதும் இனிய சொல்லே பேசவேண்டும். எவ்வுயிர்க்கும் தீங்கு நினைக்கக்கூடாது.

நெஞ்சத்திற்கு வேலையில்லாத காலத்திலெல்லாம் மகிழ்ச்சியை 'யுண்டாக்கும் நினைப்பையே நினைக்கப் பழகவேண்டும். துன்பத்திற்கும் கவலைக்குங் காரணமாகிய எண்ணங்களை சிறிதும் எணணவே கூடாது. காலங்கிடைக்கும் போதெல்லாம் கூடுமானால் தனியாய் சுத்தமான காற்றுலவுமிடத்தில் சுகமான ஆசனத்திலிருந்து தன்னுடம்பின் உட்கருவிகளை உள்ளத்தினால் ஊன்றியுணர வேண்டும். இப்பழக்கத்தினால் நினைக்கும்போது இருதயத்துடிப்பையும் நாடி நடையையும் குறைத்துக்கொண்டு தூங்காத தூக்கத்திலிருக்கக்கூடும். உடம்பு கெடாதிருந்தால்தான் மனம் மகிழ்ந்திருக்கும் ஆதலால் உடம்பை தினந்தோறும் நல்ல நிலையிலிருக்கின்றதாவென்று பார்த்துக்கொண்டு வரவேண்டும். காலையிலெழுந்தவுடனே உடம்பு நோயும் பளுவுமில்லாமல் இலேசாயிருக்கிறதாவென்று பார்க்க வேண்டும். மலமும் மூத்திரமும் வெளிப்படுகின்ற போது அவைகளின் அளவையும் நிறத்தையும் மணத்தையும் கனத்தையும் பார்த்து நாம் நேற்று உண்ட

உணவும் செய்த செய்கையும் யாவையென்று கருதிப் பார்த்துக்கொண்டு வந்தால் தன்உடம்பிற் கெந்தெந்த வுணவாதிகள் என்னென்ன செய்கின்றன வென்று நன்றாய் விளங்கும். மலமூத்திரங்கழிப்பதற்கும், உணவு கொள்வதற்கும், உறங்குவதற்கும் இன்பநுகர்வதற்கும், ஒவ்வொரு காலத்தை வரையறுத்து வைத்துக் கொண்டு தவறாது நடக்கவேண்டும். தன்னுடம்பிற்கு ஒவ்வாத உணவை நீக்கி விடவேண்டும். ஒரு உடம்பிற்கு நன்றி செய்யும் உணவு மற்றொரு உடம்பிற்கு தீங்கு செய்யக்கூடும். ஆதலால் இதை ஒவ்வொருவரும் தம்தம் அனுபவத்தாலறியவேண்டும்.

அன்பு, இரக்கம், பேரின்பம் ஆகியவைகளைப் பெருக்கும் எண்ணங்களையே எக்காலும் எண்ணவேண்டும். எட்டாதவைகளைப்பற்றி கவலைகொள்ளக்கூடாது. எந்த விடத்தையடைகின்றோமோ யாரைப்பார்க்கின்றோமோ யாரோடு பழகுகின்றோமோ அவர்களின் குணங்களையே நாம் பெறுகின்றபடியால் நல்லோரையடைந்தே பழகவேண்டும். கபத்தைச் சேரவொட்டாமற்றடுப்பவையும் மலமூத்திராதிகளை முறைப்படி அளவோடு கழிப்பவையுமாகிய உணவுகளையுண்டு வரவேண்டும். புளியாரை, கரிசலாங்கண்ணி, தூதுளை, பொன்னாங்கண்ணி, வல்லாரை, முருங்கை, பசலை, கறிவேப்பிலை, காசினி முதலிய கீரைகளையும் வாழைப்பூவையும், கத்திரிப்பிஞ்சு, வாழைக்கச்சல், அவரைப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, தூதுளங்காய், சுண்டைக்காய் முதலிய காய்களையும் கருணைக்கிழங்கு, உருளைக்கிழங்குகளையும் உண்பது நலம்.

ஒருவேளை கோதுமையையும் இருவேளை பச்சரிசியையும் உண்ணல் இல்லறத்துள்ள நல்ல தேகமுடையார்க்கு நலந்தரும். நெஞ்சமாகிய சக்கரத்தை எந்த நினைப்பில் மாட்டுகின்றோமோ அந்த நினைப்பிலேயே அது சுழன்று கொண்டிருப்பது வழக்கமாகையால் விழித்தவுடனே வேறு பொருள்களில் நெஞ்சம் பற்றுதற்கு முன்னே, பேரின்ப வெள்ளமே! கவலையற்றவனே, துக்கமற்றவனே! தூக்கமற்றவனே நோய் மூப்பு மறணமற்றவனே! அன்புருவானவனே அருட்பெரு வெளியே! என்று முழுமுதற் பரவெளியை வாழ்த்தி பேரின்ப மெய்தவேண்டும். அப்படிப் பழகிவருவதால் மனம் எப்போதும் இன்ப வடிவாய் விளங்கும். நிலைக்க வறியாது பலவகைகளிலும் அலைப்புண்டு கிடக்கு மனம் எத்தொழிலையும நன்றாய்ச் செய்யமுடியா தாகையால் எந்த தொழிலைச் செய்கின்றோமோ அதிலேயே மனம் நிலைத்திருக்கப் பழக வேண்டும். இந்த மனோநிலை யடைவதற்கே முற்காலத்து அறிஞர்மந்திர யந்திர நூல்களையும் யோக நூல்களையும் எழுதினார்கள். காமக் கனலாற்றகிக்கப்பட்டும, கோபத்தணலால் உருக்கப்பட்டும் கவலைக் கடலால் அலைக்கப்பட்டும், ஆசைக்காற்றால் தாக்கப்பட்டும் பலங்குன்றிய நெஞ்சம் பயமே மீக்கொண்டு எத்தொழிலுக்குமஞ்சும, எவருக்கும் அஞ்சும. ஆகையால் இப்படிப்பட்ட கடும்பகையாளிகளின் கையில் மனப்பிள்ளையை காட்டிக்கொடுக்காது காத்துக் கொள்ளவேண்டும். நாடோறும் எவ்வளவு நேரமாவது அடக்க நிலையில் பொறுமையுடன் மனதை நிருத்திப் பழகவேண்டும. அந்தப் பழக்க

மேறிய மனம் குடும்பத்திலுண்டாகும் கவலை பயம் முதலியவைகளுக்குச் சிறிதும அஞ்சாது யனைபோல் நிற்கும். நினைப்பதை முடிக்கும் ஆற்றல் இவ்வித மனோதிடம் பெற்றார்க்கே உண்டாம. இதைத் திருவள்ளுவர் "எண்ணிய வெண்ணியாங் கெய்துவர் எண்ணியர் திண்ணிய ராகப் பெறின்"

என்கிற குறளில் விளக்குகின்றார் ஒன்றை நினைத்தால் மற்றொன்றை மறப்பது மனத்திற்கு இயல்பு ஆதலால் இன்பத்திலிருக்கவேண்டியவர்கள் துன்பத்தை விளைக்கும் நினைப்புகளை மறப்பதற்காக ஆனந்த வடிவான இறைவனைப்பா வெளிவடிவாய் மன வெளியூடு மருவச்செய்து வாளாவிருப்பர். இருவகையான அறத்தில மக்கள் இல்லறத்தைதயேனுந்துறவறத்தையேனும் மேற்கொண்டொழுகுதல் முறை. இல்லறத்திலுண்டாம் இடுக்கணைத் தூறியப்பொறையைப் பொருமையுடன் தாங்கும் மனோதிடமற்றார் சிலர் துறவற மேற்கொண்டு மழித்ததலையுங் கோவணவுடையுங் கொண்டவராய் வெளியாகின்றார்கள். நகர மகளிர் அவ்வாற்றொழுகுவார்க்கு அறுசுவையுண்டியும பண்ணிகாரங்களும் பழவகைகளும் ஊட்டி உடமபிற் குறனுண்டாக்கவே அவ்வுடம்பில் விந்து ஊறியது காமவெகுளி மயக்கங்களை அதிகப்படுத்தி உடமபிற்கு நோயையும் உயிருக்கலைப்பையும் உணடாக்கி அவர்களை துன்பக்கடலில வீழ்த்துகின்றது.

இக்காலத்தில் ஆடவப்பிறப்பு குறைந்தும் பெண் பிறப்பு மிகுந்து மிருப்பதாலும் துறவற நெறியிலிருந்திக் காக்கும் பெரியார் கிடைப்பதருமையா யிருதத

வினும் இல்லறத்தை மேற்கொண்டொழுகுவதே எளிது. ஆனால் புலன்களை யடக்கியாளும் அறிவின்றி கூத்து, விழா, கூத்தியர், குடியாதிகளிற் சென்று கைப்பொருளையும உடல வலியையும இழந்து மெய்யறி வழிந்து மனநதடுமாறுகின்றோர் பலர் இல்லறத்திலெப்போதும துனபமே காண்பர். இல்லறத்தி லின்பங்காண்டற்கு நிரம்பிய அறிவும்பொறுமையும அடக்கமும் தூக்கிவினை செய்யும் தூய்மையும் வேண்டும். பிறர் ஊணுடைகளைப்போல் தாமுண்டுடுத்தக் கருதக்கூடாது. வருவாய்க்கும் நிலைமைக்குந் தொழிலுக்குங் காலதேச வேறு பாட்டிற்குந் தக்கபடி தமது ஊண் உடைகளை வகைப்படுத்திக் கொள்ளவேண்டும் வருவாய் வரும் என்பதை யெண்ணி கடன் வாங்கக்கூடாது. வதுவை முதலிய காலங்களில் தமது ஆற்றலுக்குத் தக்கபடி சிறப்பு செய்தல் வேண்டும். பிறர் மதிப்பைக்கருதி செலவுசெய்தல்கூடாது. கால தேய வேறு பாட்டிற்குத்தக்கபடியும் உடம்பி னியல்பிற்குத் தக்க படியும் பசியின் அளவிற்குத் தக்க படியும் உணவை காலநதவறாது பசித்தபின்னுண்ண வேண்டும். நல்ல காற்றும் சூரிய வெளிச்சமும் நிரம்பிய இடத்திலே வாழவேண்டும். தண்ணீரை சுடவைத்து குடிக்கவேண்டும். காலத்தைவீணாய்ப்போக்காமல் அறிவுடையார்பாலும் அறிவுடையார் நூல்களின் பாலுங் கழிக்கவேண்டும். கண்ணோட்டமும் நன்றியும் கருமங்கெடாமலும் குணமறிந்துஞ் செய்யவேண்டும். ஈகை நன்றெனினும் கூடிய வளவே செய்யவேண்டும். சுற்றத்தாரும்நண்பருஞ்செய்யுங் குற்றங்களை பொறுத்துக்

கொள்ளவேண்டும். இல்லத்துணைவியிடம் அன்பு காட்டவேண்டும் ஆயினும் அவளுக்கஞ்சி நடக்கக்கூடாது.

பிள்ளைகட்கு கூடிய வரை உண்மையான கல்வியை எந்த மொழியிலாவது நிரம்பக் கொடுக்கவேண்டும். அவர்களை நல்லொழுக்கத்திற் செலுத்த வேண்டும். எவ்விதமான இடுக்கணுக்கும் அஞ்சாது எதிர்த்து வீரங்குன்றாதிருக்க வேண்டும், உடம்பின் திடத்திற்கும் உணவிற்கும் காலதேய வேறுபாட்டிற்குந் தக்கபடி தேக முயற்சியும் மனோ முயற்சியும் இருக்க வேண்டும். இல்லாவிடின் நல்ல தூக்கமும் பசியும் உண்டாகாது. பசியும் தூக்கமும் கெட்டால் உடம்பு கெடுமென்பது உண்மையே. பழைய காலத்திலிருந்த உடை நடை உணவாதிகளையே இப்போதும் பெற வேண்டும் என்றும் அவைகளுக்கு மாறா யிருப்பன வெல்லாம் தவறே யென்றும் சிலர் கருதுகின்றார்கள். பழையனவாயினும் புதியன வாயினும் உடம்பிற்கேனும் உயிருக்கேனும் பயன்றருவன வெவையோ அவைகள் கொள்ளற்பாலனவே. பல திசை மக்களின் குடியேற்றத்தாலும் கூட்டுறவாலும் நடை யுடை யுணவாதிகள்மாறுவதுஇயல்பே.நம்பழையோரொழுக்கத்தினும் எவ்வளவேனும் சிறப்புடையனவாய்க் கண்டால் அவைகளை பிறரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளவேண்டுவது நன்மையே. யந்திரங்களினுதவியாற் செய்யும் பலவகைத் தொழில்களை நமது மேனாட்டாரிடம் நாம் கற்றுக்கொள்ளதான் வேண்டும். ஆனால் குளிர்ந்த நாட்டிற்குத் தக்கபடி அவர்கள் உடுத்தும் உடையை நாம் உடுத்தக் கற்றுங்கொள்வதில் நல

மில்லை. அவர்களைப்போல் கால்சட்டையும் பாதக் கவசமும் போடப் பழகி விட்டவர்கள் வேனிற்கால வேர்மையால் படுங்கஷ்டம் மிகுதி, மழைகாலத்தில் வழியில் நிற்கும் தண்ணீரில் இரங்கி நடக்க வேண்டி வந்தால் விலையுயர்ந்த கவசம் கெட்டு பணக்கேட்டை யுண்டு பண்ணுமே என்கின்ற துயரம் மிகுதி. ஆதலால் இந்நாட்டிற்கு அவ்வுடை வேண்டுவதல்ல. உண்டபின்பு நம்மவர்கள் வாயைப் பல முறைகழுவு வதால் பற்களிற் பருக்கை நில்லாமலும் அதனாற் பூச்சுகளுண்டாய் சொத்தைப்பல் முதலிய உண்டா காமலும் சுகமாயிருக்கின்றோம்.

உண்டபின்பு வாய் கழுவாமை பற்களுக்கு ஊனம் என்பதை யுணராதவர்களைக்கண்டு நாமும் அவர்போலொழுகுவது அழகா. குருட்டுத்தனமாய் யாரொழுக்கத்தையாவது பின்பற்றுவது கூடாது. நல்லொழுக்க முடையாரிடத்துஞ் சில தீய வொழுக்க முண்டாதல் இயல்பே. தீயாரிடத்தும் ஒரு சில நல்லொழுக்க முண்டாவதும் இயல்பே. ஆதலால் எதையும தீரவிசாரித்து யோசித்து அனுப வித்து அறிந்து ஒழுகுதலே யறிவுடைமை. மேனாட்டறிஞர் நமது நாட்டிற்கு வந்த பிறகுதான் பெண் கல்வி பெருகுகின்றதென்று சிலர் எண்ணுகின்றார்கள். எக்காலத்துமே தமிழ் நாட்டுப் பெண்கள் கல்வியிற் சிறந்து விளங்கினார்கள் என்பது பண்டைக்காலத்து தமிழ் நூல்களிற் பெரிது பழகுவார்க்கு நன்கு விளங் கும். அக்காலத்து பெண்டீர் சிறிது எழுதப்படிக்க மட்டில் கற்றுக்கொண்டவர்களல்லர். நெஞ்சை திடப் படுத்தி நிறைகாக்கக் கற்றவர்கள். அக்கல்விதானே

கற்பு. இக்காலத்திற் சிறந்த புலவர்களானும் அளந்தறிதற் கரிதான பெரும் பொருள்கள் நிறைந்த அரும் பாடல்கள் நூற்றுக்கணக்காய் காணப்படுகின்றன பெண்டிர் பாடியவை. அவர்களுள் சிலர் பெயரை எண்டுரைக்கின்றேன் ஆதி மந்தியார், வெள்ளிவீதியார், ஔவையார், பாரிமகளிர், பூதப்பாண்டியன் தேவியார், வில்லிபுத்தூர்க் கோதையார், காக்கைபாடினியார். நச்செள்ளையார், குறமகள் இளவெயினி, பேய்மகள் இளவெயினி, காவற்பெண்டு, காரைக்காற் பேயமமையார், நல் வெள்ளி, மதுவேலைக்கடைபத்தார், பொன்மணியார், மாற்பித்தியார், முன்னியூர்ப்பூதியார், ஒக்கூர் மாசாத்தியார், குன்றியாள், வருமூலையாரித்தி, பெடும பல்லியத்தை. கழார்க் கீரனெயிற்றியார், அள்ளூர் நன்முல்லையார், நக்கண்ணையார், நன்னாகையார், வெண்பூதியார், மாரோகத்து நப்பசலையார், போநதைப பசலையார் முதலியோர். அன்னிய ஆடவர்க்கு மத்தியில் தமது பெண்டிர்களுக்கும் நாற்காலி கொடுத்துட்கார வைக்கும் சில நாட்டாரொழுக்கத்தைக் கண்ட சிலர் நமது நாட்டார் பெண்டிர்க்குச் சுதந்திரங் கொடாது அடிமைகளாக்கி வதைக்கின்றார்கள் என்றும அப்பெண்டிர்க்கும ஆடவரைப்போல் சுதந்திரம் வேண்டுமென்றும் வாதாடுகின்றார்கள். நமது நாட்டாரைப்போல் பெண்டிருக்குச் சுதந்திரம் கொடுப்போர் வேறெங்கும் இல்லை. தாம விருநதிப் பெறும் எல்லாப் பொருள்களினும் தம் துணைவியரையே சிறந்த பொருளாய்க்கருதி நம்மவர்கள் இல்லத் திருத்திக் காக்கின்றனர். தமக்கு வரும் வருவாயெல்லாம் அவர்கள் செலவிற்கே ஆக்குகின்றார்கள். அவர்

கள் சம்மதமின்றி யெவ்வளவு சிறிய காரியமும் ஆடவர் தாமே செய்கிறதில்லை, தாம் எவ்வளவு வெய்யிலினும் மழையிலும் காய்ந்தும் நனைந்தும் பாடுபட்டுச் சம்பாதிக்கும்பொருளிற்கு வேண்டியவைகளையும் கடைக்குச்சென்று தாமேவாங்கிவந்து தமதுதுணைவியர்க்குக் கொடுத்து அவர் மனங்கோணுது பிள்ளைகளுடனும் சுற்றத்தாருடனும் உணடுடுத்திக்களிக்கும் நம்மவரா பெண்டீரை வதைக்கின்றவர்கள். நம்மவர்கள் துணைவியரைக் குறைந்த பொருளாய்க் கருதுவராயின் பலர் காணவும் ஆடவருடன் பாடியாடித்திரியவும் விட்டுவிட மாட்டார்களா எவ்விடத்திற்கும நடந்து செல்லும் ஏழையும் தன் மனைவியை வண்டியிலழைத்துக் கொண்டுபோக வாடகை தருகின்றுனென்றால மகளிர்பால் நமமவர் வைத்த மதிப்பு என்னே. யாரோடுங் கலந்துண்டு பாடியாடித்திரிவது சிறியார் செய்கை யென்று கருதும் நமதாடவர்கள் தாமே கீழாகக் கருதுஞ்செய்கையில் தமது மகளிரை நுழைக்கப் பார்ப்பார்களா. ஆனுல் அறிவுடைய மகளிரை வதைக்கும் பேதைகளும் பலர் நம்மவரில் இருக்கின்றுர்கள். அஃது அவர்வினைபோலும். மகளிர் நிறையைக்காப்பது நாணம் ஒன்றே. இந்த நாணம உண்டாகும் பூப்புப் பருவத்தில் மக்களை வெளியில் விடாது காக்கும் நமது பெற்றோர் மிக அறிவுடையவர்கள். அந்த நாணத்தை அப்போது காவாவிடின், கள்ளாஞ்செறிந்த சிறியார் வயப்பட்டு காரிகைகள் அறிவழிகின்றுர்கள்.

தமக்கு எவ்விதத்தும் உவமையாகாதவரைத் துணைவராகச் சேர்த்து உறவினர் மணமுடித்து

வைப்பது சரியன்றென்றுஞ் சிலர் கூறுகின்றார்கள். ஒரு தலைமகனும் ஒரு தலைமகளும் தாமே கலந்து மணமுடித்துக்கொள்ளும் செயல் எக்காலத்திலும் நமது நாட்டில் உண்டு. இவ்விதமணந்தான் மறையவர் கூறும் எட்டு வித மணத்துள் ஒன்றாகிய காந்தருவமணம் என்பது. இதை யரசற்குரியதென்று வடநூல் கூறும். ஆனால் பண்டைத்தமிழ் நூல்களெல்லாம் இம்மணத்தைதான் சிறப்பாய் விரித்துரைக்கின்றன. வள்ளி நாயகியாரை முருகன் மணந்த வகையிதுவே. இம்மணம் பலகாரணங்களால் காலம் ஏற ஏற, இப்போது வழக்கத்திலில்லாமலே போய்விட்டது. தமக்கு ஒத்த நலனும் ஒத்த அறிவும் ஒத்த குடியும் ஒத்த வொழுக்கமும் உடைய கணவரைத் தாமே தேர்ந்து கொள்ளும் அறிவும் ஆற்றலும் உடைய மகளிர் இப்போதும் அப்படிப்பட்ட மணத்தை வழக்கத்திற் கொண்டுவர அறிஞர் வழிகாட்டுவாராயின் நலமேபயக்கும். கோலத்தைக்கண்டு ஒருவரை பெரியார் என்றும் சிறியாரென்றும் எண்ணக்கூடாது. சொல்லும் செயலுமே ஒருவர் குணத்தை யளக்குங் கருவிகளா யிருக்கின்றன. பெருமையுஞ் சிறுமையும் நாமே நமது சொல்லாலும் செயலாலும் அடைகின்றோமேயன்றி ஒருவரும் தாமே நமக்குக் கொடுப்பதில்லை. நாம பொறுமையுடையவர்களானால் ஒருவர் கோபமும் நம்மிடம் செல்லாது. நாம் கீழோரிடத்துந் தாழ்மையாய்ப் பேசினால் நம்மை ஒருவரும் இகழவே மாட்டார்கள். நாம் வீண்செயலுக்குப் போகாவிட்டால் எப்போதும் நமக்கு வருத்தமே உண்டாகாது. ஆனால் நாம் எல்லாருக்குந் தாழ்ந்தவர்கள்

என்று நினைத்து நாணமும் பயமுங் கொண்டிருக்கக் கூடாது. எந்தவகையினும் நாம் யாருக்குந் தாழ்ந்தவர்களல்லவென்கிற எண்ணம் நம்மிடத்தில் திடமாயிருக்கவேண்டும். அவ்வவ்வர்களின் மனோ நிலையையுங் கால நிலையையும் அறிந்து பேசுவோமாயின் கூற்றைப்போலுங் கோபமுடைய மன்னனிடத்தும் திடமாயெதிர்நின்று அஞ்சாது பேசி வெற்றி பெறலாம். ஒருவனுக்கு மன்னனைப்போல் கோலஞ்செய்து கூத்தாடும் அரங்கத்தில் விட்டால் அந்த சிறிதுகாலம்வரை அவன் தன்னை மன்னனென்றே யெண்ணி அதற்குரிய சொல்லையும் செயலையும் உடையவனாப் ஆகின்றான். பெண்வேடம் பூண்டவன் அதுவரை அப்படியே யாகி நடிக்கின்றான். குரங்குவேடம் பூண்டவன் குரங்கின் சேட்டையையே யடைகின்றான். ஆனால் உள்ளத்தில் எவன் வேடத்திற்குத்தக்க திறம தன்னிடத்திருக்கின்றதென்று ஊன்றி நினைக்கின்றானோ அவன்றான் அப்படி நடிக்கின்றானேயன்றி அத்திறம் தனக்கிருக்கின்றதோ இல்லையோவென்று எண்ணுகிறவன் அச்சமும் நாணமுங் கொண்டு காணவந்தார் கைகொட்டி நகைக்கும்படி தன்னாட்டத்தையும் பேரையுங் கெடுத்துக்கொள்ளுகிறான். ஆதலால் நாம் எவருக்காவது தாழ்ந்திருக்கின்றதாய் ஒருபோதும் நினைக்கவேகூடாது. நமக்கு அருமையான செயலென்று ஒன்றையும் கருதவே கூடாது. வஞ்சமனமற்றிருக்கவேண்டும். கள்ளத்தனம் கூடாது. உழைப்பிற்கஞ்சக்கூடாது. நாளைக்குச் செய்வோம் என்னும் எண்ணங்கூடாது. சிறிய இன்பங்களினால் தமது கடமையை மறக்கக்கூடாது. ஊக்கமுடையவராய் இருக்க

வேண்டும் இடையூறுகளைக்கண்டு மனந்தளரக்கூடாது. கொக்கைப்போல் சமயம் பார்த்துக்கொண்டிருந்து அதன் குத்தைப்போல் காரியத்தை முடிக்கவேண்டும். ஏறிழுக்கும் எருமைக்கிடாய் எப்படிப்பட்ட முட்டிற்கும் அஞ்சாது வருந்தியும் இழுத்துச் செல்வதுபோல் விடாமுயற்சியுடையவர்களாயிருக்கவேண்டும் பெரிய யானை சேற்றில் காலைபிரக்கிவிட்ட காலத்து நரியதைக் கூட்டத்துடன் சென்று சொல்வதுபோல் பகைவர்கள் வலியை காலமறிந்தே தொலைக்கவேண்டும். பாகன் செய்யும் நன்றியை மறந்து அவன் அடிக்கும் அடியை ஞாபகத்தில் வைத்திருந்து அவனைக் கொல்லும் யானையைப் போன்றாரை நண்பராய் கொள்ளக்கூடாது. வளர்ப்போர் கொடுக்கும் எச்சிலை நினைந்து அவர் செய்யும் கொடுமையை மறந்து நன்றிபாராட்டும நாயைப் போன்றவர்களை நண்பராய்க் கொள்ளவேண்டும். மக்கள் இயற்கையிலேயே மனம் வேறு செய்கைவேறு யிருக்கின்றவர்களாகையால் ஒருவரையும் எளிதில் நம்பி நாம் மேற்கொண்டவைகளை அவருக்குச் சொல்லிவிடக்கூடாது. ஒருவருடனும வெறுப்பையும் பகையையுங் காட்டக்கூடாது எப்போதும் யாருடனும இனிமையாயும் வணக்கமாயும பேசவேண்டும. தெய்வவழிபாட்டில் அருமையான தெய்வத தன்மையை நாம் பெறுகின்றோமென்ற நம்பிக்கை வேண்டும. நமகக்கு அருமையான செயல ஒன்றுமில்லையென்றும் எலலா ஆறறலும நம்மிடததிலிருக்கின்றதென்றும் உண்மையாய் நம்பவேண்டும. காககையைப்போல் சுற்றத்தார்சூழ்ந்திருக்கவாழவேண்டும். தூக்கத்தையும் மயக்கத்தையும் சோம்பலையும் உண்டாக்கும

கள், இறைச்சி முதலிய உணவை அடியோடு விலக்க வேண்டும். எக்காலத்தும் மகிழ்ச்சியுடன் இருக்கப்பழக வேண்டும். பொறுமையையும் அடக்கத்தையும் அணியாகக்கொள்ளவேண்டும். இவைகள் தான் இல்லறத்தில் இன்பத்தையுண்டாக்குங் குணங்கள். மன்னரிடத்தாவது செல்வரிடத்தாவது நாம் வேலைசெய்ய நேர்ந்தால் அவர்களைப் போலவே உடுக்கவும் நடக்கவுங் கூடாது. அவர்களுக்கெதிரில் மற்றோருடன் மறை (இரகசியம்) பேசவும் நகைக்கவும் கூடாது. தீக்காய்பவன் எப்படி நெருப்பை விட்டு நீங்காமலும் அதை நெருங்காமலும் இருப்பானே அப்படி அவர்களிடம் ஒழுக வேண்டும். நாடோறும் ஒவ்வொன்றை புதிதாகத் தெரிந்துகொள்ளவோ மறந்ததை நினைக்கவோ யொழியாது படித்துக்கொண்டே யிருக்கவேண்டும், பெரியாருடன் காலங்கிடைத்தால் உரையாடி மகிழ்ந்திருக்க வேண்டும். குணத்தை யறியாது ஒருவருடனும் நட்பு பாராட்டக்கூடாது கற்றாராயினும கல்லாராயினும் இளையோராயினும் முதியோராயினும் செல்வராயினும வறியோராயினும் ஏதாவது கூறுவாராயின அது பயனுளதாவென்று ஆராய்ந்து விருப்புவெறுப்பின்றி சீர்தூக்கிப் பார்தது உண்மை கண்டால் அனுபவத்திற் கொள்ள வேணடுவதே. நாகத்தினிடத்தில் இரத்தினமிருந்தாலும் அதை ஒருவரும அடையாதவாறு தீயோரிடத்து பெறுதற்கரிய ஏது இருந்தாலும் நாம அவுரை யடையக்கூடாது.

பசுவின பாலைக் கனறின் மூலமாய் கரந்து கொள்வதுபோல நமக்குத் தெரியாதவர்களிடம் நாம் ஏதாவது பெறவேண்டுமானால் அவர்களுக்கு அன்புடை

யார் மூலமாய்ப் பெறவேண்டும். வெல்லம் வேண்டு வார் கரும்பை ஆலையிலிட்டாட்டிப் பெறுவது போலவும் இறகு வேண்டுவார் மயிலைக் காலால் மிதித்துப் பிடுங்கிக்கொள்வது போலவும் நமக்குத் தரவேண்டிய பொருளை தராது வஞ்சனை புரிவாரை மன்னர் மூலமாய் தண்டஞ் செய்தே பெறவேண்டும் உள்ளிக்கு எவ்வளவு மணமூட்டினாலும் இயற்கை மணம் மாறாது. வேம்புக்கு சர்க்கரை சேர்த்தாலும் கைப்பு மாறாது பத்தை கட்டினாலும் நாய் வால் நிமிர்ந்து நில்லாது அதுபோல் தமது செயலே பெரிதெனவும் தாமே அறிவுடையாரென்றும் கருதிப்பிடிவாதஞ்செய்வார்க்கு புத்தி கூறினால் நமது உரை பயன்படாது போவது மன்றி நம்மை மனம் வருந்த அவர்கள் பேசுவதற்கும் இடமாகும் ஆதலால் அப்படிப் பட்டோர் சொல்லுவதற் கெல்லாந் தலையாட்டிக் கொண்டு வாளா விருக்க வேண்டும். நமது சொல்லை மதிப்பார்க்கும் நம்மை வழிபடுவார்க்குமே நாம் தெரிந்ததைக் கூறவேண்டும். பெரிய தேரை நிலை நிறுத்தும் சுள்ளாணிபோல உருவிற் சிறியராய் அறிவிற் பெரியராய் உள்ளாரும் காணப்படுவதால் யாரையும் பழகி யறிவதற்குமுன் பயனற்றவராய் எண்ணக்கூடாது. புகையிலையும் சாராயமும நஞ்சின் குணமுடையனவாய் மூளை இருதயம் நீனிப்பை முதலியவைகளின் திடத்தை விரைவில் அழிப்பனவா யிருக்கின்றபடியால் சிறிதேனும் உபயோகிக்கப் பழகக்கூடாது. நாம் உண்மையாகவே அறிவினும் குணத்தினும் சிறந்துளோம் என்று பிறரால் மதிக்கப்பட்டாலும் நமக்கே அந்த நம்பிக்கை இருந்தாலும் நாமே பிறர்முன் அதைப்பற்றிக்

கூறிக் கொள்ளக்கூடாது. அப்படி கூறினால் பிறரால் பித்தரென்று எள்ளப்படுவோம். எந்த உயிருக்காவது நன்மையாவதாயும் நமக்குத் தீங்கு வாராததாயு மிருந்தால் பொய் சொல்லலாம் அது உண்மையின் பாற் படும் என்று பெரியோர் கூறுவர். காற்றினும் நீரினும் மண்ணினும் உடம்பிலுள்ள இரத்தமுதல் எல்லா உறுப்பினும் கண்ணிற்குத் தோன்றாத நுண்ணிய பூச்சுகளே காணப்படுவதால் எங்கும் உயிரே நிரம்பி யிருக்கின்றதென்று அறிகின்றோம். அந்த நிரம்பிய உயிரையே கடவுள் என்று உணர்கின்றோம் பஞ்ச பூதங்களின் சேர்க்கையால் உயிர் உணர்ச்சி யடைகின் றது. நெருப்பு ஒன்றாயினும் காந்தவிளக்கைப் பற்றி யது பெரு வொளியாயும் மண்ணெண்ணெ விளக்கைப் பற்றியது, அதற்குச்சிறிய வொளியாயும் மற்றைய நெய் விளக்கைப்பற்றியது அவ்வவ்விளக்கின் திரிக்குத் தக்கபடியும் விளங்குவதுபோல் உயிர்களும் தாம் இருக்கும் உடம்புகளின் கருவி காரணங்களுக்குத் தக்கபடி உணர்ச்சி யடைகின்றன. மக்களுடம்பு ஒன்றே கருவிகாரணங்களே யதிகமாயுடையதாதலால் அதற்குள்ளிருக்கும் உயிர்க்கு உணர்ச்சியதிகம். வேறு பாடு காணப்படாத மக்களுக்குள்ளேயே ஒருவன், ரிக் ஷாவண்டி யிழுக்கவும் மற்றவன் அதிமேலேறிவரவும் காண்கின்றதை யெண்ணும்போது பண்டை வினைப் பயனே இவ்வேறுபாட்டிற்குக் காரணம் என்று அறி கிறோம். பண்டை நல்வினைப் பயனால் நல்ல பதவியை நாம் பெற்றோமாகில் அதைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டும். மனதில் ஊன்றிய நினைப்பு அதன் பயனைக் கொடுப்பது உண்மை என்பதை புறநாட்டார் இக்

காலத் தெழுதியுள்ள மனோதத்துவநூலும் விளக்கு கின்றபடியால் நான் விளக்கவேண்டுவதில்லை. ஒரு வழிப்பட்ட மனத்துடன் யாராவது மகிழ்ச்சியுடன் வாழ்த்தினால் நாம் வாழ்வு பெறுவதும் வருந்தி வைதால் நாம் வருத்தமடைதலும் உண்மை யாதலால் நாம் நல்ல பதவியைப் பெற்றபோது ஒருவருக்குந் தீங்கு செய்யாது யாருக்கும் நன்றியே செய்யவேண் டும். நீதிதவறக்கூடாது மயிர் தலையிலிருக்கின்றவரை நீராட்டி அகிற்புகையூட்டி வாசநெய்பூசி மணப்பூ சூட்டிக் கோலஞ் செய்யப்படுகின்றது அது தலையி லிருந்து வீழ்ந்தால் உணவில் விழப்போகின்றதென்று உடனே குப்பையிற் றள்ளுகின்றோம். நாமும் அப் படியே லஞ்சம் வாங்கி. நீதிதவறி பதவியினின்றும் நீங்கினால் கீழோராலும் இகழப்படுவோம். நிரம்பிய பொருளும் அதனால் பூரித்த அழகிய உடம்பும் பெற் றிருக்கும் உறவாடவும் தொண்டு செய்யவும் உண் டுபிக்கவும் பலர் வருவார்கள் தூரத்திலிருந்த சுற்ற மும் நெருங்கி வந்து மகிழ்ந்திருக்கும். நாம விரும்பி யது நன்றேனும் தீதேனும் அவைகளைப் பெற்று மகி ழும்படி நட்புபாராட்டி குடிச்சாலைக்கும் கூத்தியர் சேரிக்கும் அழைத்துக்கொண்டுபோக வருவார் பலர். அணிவாங்கிக் கொடுக்கவும் ஆடைவாங்கிக் கொடுக்க வும் நடுநிற்பார் பலர் கலியாணத்திற் கென்றும் அறச் சாலைக்கென்றும் பள்ளிக்கூடத்திற் கென்றும் ஏற்க வருவார் பலர். உண்மையாகவே பசியாலுந் நோயா லும் வருந்துகின்றவர்களுக்கு உள்ளே வந்து காண விடங் கிடைப்பதே யருமையாயிருக்கும். அப்படிப் பட்ட காலத்தில் அவ்வவர் குணங்களையும் நன்மை

தீமையையும் அறிந்து அதற்குத் தக்கபடி கொடுக்க வேண்டும். வருவார் பேச்சிற்கும் பெருமிதத்திற்கும் பொய்த் தோற்றத்திற்குத் தக்கபடி கொடுக்கவேண்டு மென்று நினைக்கவே கூடாது. இந்திரனுட்டின்பத் தைக் கொடுக்குமாயினும் வருவாய்க்குமேல் செலவு செய்தல் வறிய துன்பத்தையே கொடுக்கும். ஆனால் தாமும் உண்டுடுத் தின்ப நுகராது பிறருக்கும் உத வாது கடன் கொடுத்தோ சேர்த்தோ வைக்கும் பொருள் வீணாய்ப்போம். உடம்பிலுயி ரிருக்கின்ற போதோ மனம் உலகை மறந்து உடம்பை மறந்து கருவி கரணுதிகளைக் கலவாது நீங்கி மோனநிலை யடைந்து பரவெளியாகின்றவரை ஏதாவதொன்றைப் பற்றி நிற்குமேயன்றி நினைப்பற்றிருக்காது ஆதலால் அந்த நிலையை யடைகின்றவரை மனதை நல்ல நினைப் பிலேயே செலுத்திக்கொண்டு வரவேண்டும். இல்லா விடின் அலைத்து துன்பத்திற் காளாக்கி விடும். அன் பிற்கும் அருளிற்கும் உறைவிடமாயிருக்கின்ற இல்ல றத்தில் நல்லற நெறியே பொருள் தேடி ஆதரவற்ற வர்களைக் காக்கு நினைவிலே மனத்தைச் செலுத்து வதே உடம்பிற்கும் உயிருக்கும் உறுதி பயக்கு நிலை. ஆனால் இல்லறத்து நுகரும் காமவின்பமே பெரிதென் றெண்ணி அதற்குக் காரணமாகிய மனைவியார்க்கு அணியாடைகளை யுதவியவர் வேண்டுவனவற்றிற்கே பொருள்தேடி விழலுக்கு இறைத்தார்போன்று அறி விழந்து உடம்பைப்போட்டுவிட்டு போய்விடக்கூடாது. இளமை, யாக்கை செல்வம் முதலியன நிலையாதவை கள் ஆதலால் உடம்பு திடமா யிருக்கின்ற காலத்தி லேயே இன்பத்திற்குக் காரணமாகிய போகப்பயிர்ச்

சியில் முயலவேண்டும்: மனதை யலையவிடாது ஒரு முகப்படுத்துவதே யோகம். மூச்சையடக்கிப் பழகினவர்க்கே மனதையடக்க முடியும் என்று சிலர் வாதிப்பர். மூச்சையடக்கு முயற்சி எல்லா உடம்பிற்கும் ஒவ்வாது. அதற்கு இடைவிடாப் பழக்கமும் தக்க ஆசிரியரும் தவறாத பத்தியமும் திடமான உடம்பும் வேண்டும். சிற்சபையாகிய புருவநடுவில் உள்ளத்தை யூன்றிப் பழகுவது எல்லாராலுஞ் செய்யக்கூடியதில்லை. இளம்பூரணரூப முருகனை அறிஞர் அவ்விடத்தே கண்டானந்த வெள்ளமூழ்கி இரவுபகலற்ற விடத்தேயிருக்கும் அழியாத வாழ்வை உடம்புள்ளபோதே பெறுவர். இதைதான் பெரியோர் பல வகையாய் விளக்குகின்றார்கள். நெடுங்கால கேள்வியாலும் பெரியார் திருவருளாலுமன்றி இம்முயற்சி கைகூடுவதருமை.

"கண்களிக்கப் புகைசிறிதுங் காட்டாதே புருவக்கலைநடுவே
விளங்குகின்ற கற்பூரவிளக்கே"

இராமலிங்கசுவாமிகள்

"ஓங்காரத்துள் ளொளிக்குள்ளே முருகனுருவங்கண்டு
தூங்கார் தொழும்பு செய்யார் என் செய்வார் எமதூதருக்கே"

அருணகிரிநாதர்.

"மூலநிலத்தி லதோமுகமாய் முகிழ்ந்து விழியின் பொடுதீயிலும்
மூரிப் பாம்பை காலனலை மூட்டியெழுப்பி நிலமாறுஞ்
சீலமொடும் போய் சரிசித்து திசழ்யமதியின் அமுதகடல்
தேக்கியகத்தங் கசைவருமோர் தெய்வத்தவத்தோருளவிழியில்
காலுந்தீபம் மிளல்பந்தங் கடிகூர் விறிசு கதிர்மதிபோல்
காட்டுமொளியாய் அவையாவுங் கடந்தாங் கழியில் பேரொளியாய்
காலவிளங்கும் விந்துவெனுந் தடமா மயிலோய் தாலேலோ
தமரக்கடலைக் கடைந்த முதந்தருவோன் மருகா தாலேலோ"

திருப்போரூர் சிதம்பரஸாமிகள்.

"உலக முவப்ப வலநேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண்டாங்கு
ஓவற விமைக்குஞ் சேண்விளங் கவிரொளி-நக்கீரர்
இத்தகைய சிற்சபைத்தரிசனஞ் செய்வோர்"

"சத்தியந் தானஞ் சமதம மின்சொற் சாற்றுத லொருவழிப் படுதல்
புத்தியே முதல கரணமோர் நான்கு மடக்குதல் புலன்கள் போக்கழியில்
உத்திடா தமைத்தல் பொறைதிடஞ் ஞானம் உயிர்க்கெலாந் தண்ணளி புரிதல்
இத்திற மனைத்தும் மானத தீர்த்த மெனவெடுத்தியம்பினர் மேலோர்"

என்கிற காசிகாண்டப் பாட்டின்படி சத்தியம், ஈகை பொறுமை, இன்சொல், ஒருவழிப்படுதல், கரணங்களை யடக்குதல், ஐம்புலன்களை யடக்குதல், பிறர் செய்யுந் தீங்கைப் பொறுத்தல் தனக்குண்டாகுந் துன்பத்தைப் பொறுத்தல், நெஞ்சை அலையவிடாது திடப்படுத்தல், நிலையாமை யறிந்து உண்மையுணர்தல் உயிர்களிடந் தருணை ஆகிய நெஞ்சநீரிற் குளிக்கவேண்டும் பல ஆற்றுநீரில் உடம்பைக் கழுவுவதும் ஓரிடத்தில்இருந்து பலவகைப்பூசை செய்வதும் அந்தணர் செய்யும் வீட்டுவேலையைக் கண்டு குழவிகள் மணைகளாற் சிறு வீடுகட்டி மணற் சோறாக்குவது போலாம். நெஞ்சநீரிற் குளித்து சிற்சபை தரிசனஞ் செய்ய விரும்பிய மாண்புடை நெஞ்சம் செல்ல வேண்டுவது நன்னெறி.

நன்னெறி.

நன்னெறி என்பதற்கு நல்வழி என்று பொருள். உலகில் நல்லவழி யென்றும் தீயவழி யென்றும் இர

ண்டுவழிகள் உண்டு. நல்லவழியில் கல்லுறுத்தாது. முள்தைக்காது. சேறழுத்தாது. நீர் நில்லாது பாம்புறையாது. கொடிய விலங்குகள் நடவா. அந்த வழியில் நடப்பார் யாரொருவர் தீங்குமின்றி குறித்த விடத்தை குறித்த காலத்திலடைவார்கள். தீயவழியிலே கல்லுறுத்தும், முள்தைக்கும், பாம்பு தோன்றும், தீய விலங்குகள் நடந்துவாழும், மேடுபள்ளங்களில் கால் இடறும், சேற்றில் கால அழுந்தும், குறித்த காலத்தில் குறித்த விடத்தை யடையமுடியாது. ஆகலால் நாம் எல்லாரும் நல்லவழியிலே நடக்கவேண்டும அதற்கு கண்கள் கெடாதிருக்க வேண்டும். கண்ணிற்குத் திரையுண்டானால் கண்ணாடியணிய வேண்டும். பித்தநீர் மறைத்தால மருந்துவிடவேண்டும். உடம்பிற்கு ஊறுபாடுண்டாகாதபடி காக்க கண்கள் இருப்பது போல உயிருக்கூறுபாடுண்டாகாதபடி காக்க அறிவிருக்கின்றது. அவ்வறிவை விளக்க கல்வியாகிய கண்ணாடியும் கேள்வியாகிய மருந்தும் வேண்டும். கல்வி கேள்விகளால் விளக்கப்படாத அறிவு தீயவழியிற்றான் செலுத்தும். தீயொழுக்கமாகிய காட்டில் சூதாடலாகிய விலங்குகளும் மயக்கத்தையுண்டுபண்ணும் கள் முதலிய கள்வர்களும் பரத்தையராகிய நஞ்சுள்ள பாம்புகளும் வாழ்கின்றன. சூதாடல் பொருளைப்போக்கி வறியவனாக்கும். கள் முதலியன அறிவையும் உடலையும் பொருளையும் புகழையும் கொள்ளை கொள்ளும். பரத்தையாகிய பாம்பு அரிய மெய்யையும் அறிவையும் விழுங்கும். ஆதலால் நாம் அந்த தீயொழுக்கக்காட்டை நோக்காது நல்லொழுக்கச் சோலையை நாடவேண்டும். நல்லொழுக்கச் சோலையில் புகழாகிய மணம் வீசுகின்றது, அன்பாகிய செல்வம் நிரம்பியிருக்கின்றது. சொற்சுவையாகிய பழவகை பழுத்திருக்கின்றன. கனியின் பத்தேன் சொரிகின்றது. கற்புடையாராம் புள்ளினங்கள் களிக்கின்றன. நண்ப

ராம் பறவைகள் அன்புபாராட்டுகின்றன. நல்லொழு
க்கத்தை மேற்கொண்டானை மன்னரும் மதித்து உப
சரிக்கின்றனர். தீயொழுக்கத்தை மேற்கொண்டார்
சிறைச்சாலையையும் வேறுவித தண்டங்களையும் அடை
கின்றார்கள். கல்வி என்பது வீண் விளையாட்டு நிரம்
பிய வறுமொழிபாலாய போது போக்கற் குரிய நூல்
களைப்படிப்பதல்ல. அகப்பொருள் புறப்பொருள் இல
க்கணத்தை அலங்காட்டும் அரிய நூல்களைக் கற்பதே.
ஆதலால் நூல்களை ஆராய்ந்து கற்கவேண்டும். கே
ள்வியென்பது அயலவர்பாற்சென்று பயனிலவும் படிற்
றுரையுங் கேட்டுப்பாழிலுவதல்ல. அறனறிந்து மூத்த
அறிவுடையார் குழாத்தைப்படைந்து தாம் கற்ற நூலிற்
கொண்ட ஐயங்களை வினவி தெளிவடைவதே. இப்ப
டிப்பட்ட கல்வி கேள்விகளாற்றுலங்கிய அறிவெனுங்
கண்ணைக்கொண்டு நன்னெறி நடக்கவேண்டும். நன்
னெறி நடப்பார்க்கு நல்லாரிணக்கம் வேண்டும். நல்
லாரிணக்கம் நாடுங்கால் வேட்டியுந் தாழ்வடமும் வெ
ண்ணீறும் வெண்பல்லுங்காட்டி வஞ்சிப்பார்பலர். உல
கை முற்றும் வெறுத்தார்போல் காவியுடையும் பாது
கையும், யோகதண்டமுங் கொண்டு சித்தன் போற்றோ
ன்றி மயக்குவார் சிலர். உண்டியும் உடையும் வெறு
த்த ஒப்பிலா ஞானிபோலுங் கோவணத்தோடு வந்து
பாலும் பழவகையுங்கேட்பார்பலர் சடைகாட்டி வெரு
ட்டுவார் பலர், சாபங் கொடுப்பே னென்பார் பலர்.
திருநீறுங் கண்டிகையுந் தோன்ற ஜெபமாலை கையிற்
றுலங்க இல்லறமியற்றும் நல்லறவாணர் போலுந் தோ
ன்றுவார் பலர். இவர்களை யெல்லாம் குணத்தை நா
டாது தோற்ற மாத்திரத்தினாலே நல்லாரென்றெண்
ணி நட்பு பாராட்டக்கூடாது. அப்படி நம்புவது உரு
த்திராக்கப் பூனையை ஊனுக்குக் காவல் வைப்பது போ
லாம். ஆகையால் நெடுங்காலஞ் சீர்தூக்கிப் பார்க்கல்
லது ஒருவரை நட்பு கொள்ளக்கூடாது. காமம் வெ

குளி மயக்கமாகிய மூன்றும் எவரை விட்டனவோ அவரே நல்லவர். நல்லவர்கள் பெண்டிரைக்கண்டு ஏங்கார்கள். அவர் பேச்சைக்கேட்க விரும்பார்கள். அவர் குற்றேவல் செய்யார்கள். அந்த பெண்ணேவல் செய்யாப்பீடுடையார் வனப்பையும் முசப்பொலிவையும் கருணையொழுகுங்கண்களையும் இனிய சொல்லையும் புன்முறுவல்பூக்கும் வாயையும் நறுமணங்கமழும் மெய்யையும் தாமரைபோலுங் கையையும் கெடாத நல்விரத்தம் பாவுதலால் தோன்றும் பொன்போன்ற மெய்யையுங்கண்டு அவர்க்கு ஏவல் செய்ய நேர்ந்துழி நிறையழிந்து மங்கையர் அவரை மயக்கவுங் கூடும். அப்படி மயக்கினும் நல்லார் அவர் வலையிற்சிக்கி எண்ணியேனும் விரும்பியேனும் மகிழவும் வருந்தவும் ஏங்கவும் மாட்டார்கள்.

யாரிடத்துங் குற்றங்கண்டு கோபியார்கள். யாரேனும் தமக்கு தீங்கு செயின் அவரை வையார்கள். தமது நற்குண நிறைந்த சாந்த நீர்க்கடலில் அத்தீயோரையாட்டி சுத்தப்படுத்துவார்கள்: எவரையும் எளிதில் நம்பி மயங்கார்கள் ;"யார் யார்" எனக்கென்ன போதித்துமென்ன வென்னறிவினை மயக்க வசமோ என்று தாமனுபவ நோக்கத்தினின்றும் பிறர் சொல்லைக்கேட்டு மாறார்கள். ஆனால் தம்மினும் அனுபவமுதிர்ச்சியுடையார் என்று தமக்குத் தோன்றினால் அவர் சொல்லைக்கேட்டு நடப்பார்கள். இவ்வொழுக்கம் யாரிடம் இருக்கின்றதோ அவர்கள் பழுத்த தலையரேனும் சடையுடையாரேனும் மற்றெவ்வகைய தோற்றமுடையாரேனும் நல்லோரே இவர்களுடன் நாம் பழகவேண்டும்.

நமது நாட்டில் தங்கமும், வெள்ளியும், முத்தும் பவளமும் பல்வகை நிறத்தால் ஒளிரும் கற்களும் பலவகையுண்பொருள்களும் பட்டும் பணிகளும் நிரம்பி உண்ணவும் உடுக்கவும் அணியவும் மக்கள் காணாதிருந்த காலத்தில் மூவேந்தரும் செலவுகாணாப் பொ

ருள்களுக்கு செலவுண்டாகவும் நமது நாட்டு பலவகை
க்கல்வியாளரின் கல்வித்தேர்ச்சி உலகெங்கும் புகழ்க்கி
டக்கவும் வேண்டி குரங்கினங்கள் தாவியேயுங் கோபு
ரங்களையும் உயர்ந்த மதில்களையும் ஆழமான அகழிக
ளையும் பளிங்குக்கற்களாலான மாடங்களையும் அணி
பொருந்திய சித்ரகூடங்களையும் அன்னமும் நாரையு
மகலாவாவிகளையும் தாமரையலர்த் தடாகங்களையும்
சந்தனமும் சண்பகமும் மணம் வீசுஞ் சோலைகளையும்
பழவகையுதிரும் தோட்டங்களையும் மயிற் பீலியும்
யானைத்தந்தமும் வாசப்பொருளுமலிந்த மலைகளை
யும் கட்டியுஞ்செய்தும் தோண்டியும் வளர்த்துங் காத்
தும் வந்தனர் மேற்காட்டியவளமையை யிழந்து வ
றுமைமிக் கெய்தி உயிர்கள் பசியால் வாடியும் குளிரா
ல் மெலிந்தும் நோயால் வருந்தியும் உலகை வெறுக்
கும் இக்காலத்தில் கோவிந்தனுக்குக் கோவிலும் நார
ணனுக்கரங்கமும் சிவக்கொழுந்துக்கு சினகரமுங்கணப
திக்கு மண்டபமும் முருகனுக்குக் கோட்டமும் புதுப்
பிக்க வேண்டுமென்றும் குளம் கட்டவேண்டுமென்
றும் நீராழி மண்டபங்காணவேண்டுமென்றும் அறிக்
கை யச்சிட்டுக் கொண்டு நாமமோதிருநீறோ நம்
பெறத்தோன்ற மூவரோ நால்வரோ சேர்ந்து உயர்
பதம் பெற்ற பொருளாளரிடஞ் சென்று கைபொப்பம்
பெற்று தேருந்திருவிழாவும் சினகரமுஞ் செய்து அக
ஞர் எய்தும் துறக்க வின்பத்தைக் காட்டினும் உண்
ண உணவிற்கும் உடுக்க கந்தைக்கும் படுக்க பாயிற்
கும் வழியிலாது ஏங்கி இளங்குழந்தைக்கு பாலில்லை
யே கிழவிக்குக் கந்தையில்லையே பசிக்குக் கூழில்லை
யே என்றெண்ணுந்தோறும் மனம்வாட முகங்குவிய
வேர்வரும்ப செய்வது தோன்றாது கடவுளை நோக்கும்
கணக்கில்லாத நாரணர்க்கும், கோவிந்தர்தஞ், சிவபிர
காசங்கட்கும், முருகன்கட்கும் கஞ்சிவாருங்கள், சோ
றுபோடுங்கள். நீர்மோர் தாருங்கள். முண்டு கொடு
ங்கள். மருந்து கொடுங்கள். பாய் கொடுங்கள்.